

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. ராம.சிவராமன் 19வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். மேலும் மனைவி திருமதி லதா சிவராமன், மகன் சிவ.வெங்கட்ராமன், மகள் விஜயசாந்தி, மருமகன் ஆரோக்ய பாலாஜி ஆகியோரை சந்தித்து ஆறுதல் கூறினார்.




காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு தலைவர் / திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நேற்று (08.07.2026) நடைபெற்றது. உடன் குழு இணை தலைவர் / காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், க.செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சினேகா, ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஹரீஷ், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, கூடுதல் ஆட்சியர் /திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆஷிக் அலி, காஞ்சிபுரம் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமன் திவாரி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### நகரச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் ஏற்பாட்டில்

# உதகை கிழக்கு நகரக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வழங்கினார்!

உதகை, ஜுலை 9-

உதகை கிழக்கு நகரக் கழகம் சார்பில், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு இளைப்பாறுதல் மையத்தில் உள்ள ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.





இதில் உதகை நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் அவர்களின் ஏற்பாட்டின் பேரிலும் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக துணைச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியும் சிறப்புரையாற்றி னார்.

இதில் மாவட்ட கழக செயலாளர் கே.எம். ராஜு, மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் பொதுக்குழு உறுப்பினர் வாணீஸ்வரி, ஒன்றியச் செயலாளர் ஜெகதீஷ், நகர அவைத் தலை வர் ஜெய கோபி, நகர பொருளாளர் அணில் குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இமயம் சசி, ராஜா, மணி, மஞ்சு குமார், விஜயகுமார், செல்வராஜ், மேத்யூஸ், வெங்கடேஷ், ரவி, பழக்கடை முஜி, கவுன்சிலர்கள் செல்வராஜ், விஷ்ணு பிரபு, கீதா, வனிதா, பிரியா, மேரி பிளோரினா, முன்னாள் கவுன்சிலர்கள் புஷ்பராஜ், முருககுமார்,

மற்றும் கழக நிர்வாகிகள் சுரேஷ், நிக்கோலஸ், உமேஷ், சதாசிவம், ரமேஷ், மகேஷ், ஜமீல், சங்கர், செந்தில் குமார், ஆனந்த், அந்தோணி குரூஸ், விஸ்வநாதன், சிவா, டிடோன் ஸ்டீபன், தங்கராஜ், பாபு விஷ்ணுகுமார், சத்யராஜ், வில்லியம், ராஜன், மகளிர் அணி பிருந்தா, ஷர்மிளா, சாந்தி, சாரதா, பியூலா, ஜெயக்குமாரி உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தர்மபுரியில் இளம் பெண்ணுக்கு கத்திக் குத்து!

# ‘சிங்கப் பெண் அதிரடிப்படை’ ரீல்ஸ்க்கு மட்டும்தானா?

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. காட்டம்!

தர்மபுரி, ஜுலை 9-

தருமபுரியில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடும் பேருந்து நிலையத்திற்குள், இளம்பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு உள்ளான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கடுமையாக விமர்சித் துள்ளார்.



தருமபுரி அருகே உள்ள தேங்காய்மரத்துப்பட்டியைச் சேர்ந்தவர் ஷீலா (24). இவர் அப்பகுதியில் உள்ள நகைக்கடையில் பணிபுரிந்து வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த சின்னசாமி (31) என்பவரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து தனிப்பட்ட காரணங்களால் ஷீலா கடந்த 6 மாதங்களுக்கு முன்பு காதலை முறித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த சின்னசாமி, நேற்று முன்தினம் (ஜுலை 7) இரவு ராஜகோபால் கவுண்டர் நகர பேருந்து நிலையத்தில் ஷீலாவை வழிமறித்து, அவரது கழுத்து மற்றும் வயிற்றில் கத்தியால் கொடூரமாகக் குத்தியுள்ளார். பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த பொதுமக்கள், சின்னசாமியைப் பிடித்து தர்மஅடி கொடுத்து காவல்துறையிடம் ஒப்படைத்தனர்.

கத்திக்குத்தில் படுகாயமடைந்த ஷீலாவுக்குத் தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு முதல் அறுவை சிகிச்சை முடிந்து, தற்போது இரண்டாம் கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும், எம்பியுமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “தருமபுரியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் பேருந்து நிலையத்திற்குள், இளம் பெண்ணொருவர் கத்திகுத்துக்கு உள்ளாக்கப்பட்டு, படுகாயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது. சினிமா பாணியில் தவெக அரசு தொடங்கிய பெண்கள் பாதுகாப்பு சிறப்புப்படை எல்லாம் விளம்பரத்திற்கு மட்டும் தானா?”

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# திருச்செங்கோட்டில் 15 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை!

### த.வெ.க. பிரமுகர் கைது!

திருச்செங்கோடு, ஜீலை 9-

நாமக்கல் மாவட்டம் திருச்செங் கோடு அருகே ஒரு கிராமத்தைச் சேர்ந்த கட்டுமான தொழிலாளி யின் 15 வயது மகள், 10ம் வகுப் பில் தேர்ச்சி பெறாததால் மீண்டும் தேர்வு எழுத வீட்டில் இருந்து படித்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு இவருக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் மருத்துவ பரிசோதனை செய்ததில், சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரிந்தது.

போலீஸ் விசாரணையில், சிறுமி 5 பேர் தன்னிடம் பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டதாக தெரிவித்துள்ளார். மேலும் நாமக்கல் அரசு மருத்துவக் 4 கல்லூரி மருத்துவமனையில் சிறுமியின் கர்ப்பம் கலைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சிறுமி கூறிய 5 பேரில் 2 பேர் த.வெ.க.வைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் நேற்று முன்தினம் திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வந்து, சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்ய வேண்டும். எங்களிடம் தெரிவிக்காமல், சிறுமியின் கர்ப்பத்தை கலைத்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என புகார் கூறினர். இதுகு றித்து போலீசார் வழக்கு பதிந்து சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த தாய்மாமன் தங்கவேல் (40) என்பவரை போக்சோ வழக்கில் கைது செய்தனர். இவர் த.வெ.க. பிரமுகர் ஆவார். மேலும் சிறுமியின் உறவினரான 15 வயது பள்ளி சிறுவனையும் போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட முக்கிய திட்டங்களுக்கு தடை!

# சென்னை மாநகராட்சியில் ரூ.700 கோடி வரையிலான டெண்டர்கள் ரத்து!

### நிதி நிலைமை சரியில்லை என காரணம் கூறும் அதிகாரிகள்!

சென்னை, ஜுலை 9-

சென்னை மாநகராட்சியில், திமுக ஆட்சியில் போடப்பட்ட திட்டங்களுக்கு தடை விதிக்கும் வகையில் ரூ.700 கோடி வரையிலான டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நிதி நிலைமை சரியில்லை, சீரானதும் மீண்டும் கோரப்படும் என்றும் அதிகாரிகள் கூறி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் தலை நகரும் மிகப்பெரிய மாநகராட்சியாக சென்னை மாநகராட்சி விளங்கி வருகிறது. வேலைவாய்ப்பு, வாழ்வாதாரங்களை தேடி சென்னையில் செட்டில் ஆகும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கனிசமாக அதிகரித்து வருகிறது. இதுதவிர வணிகம், அரசியல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக தினமும் சுமார் 25லட்சத்துக்கும் மேற்பட்டோர் சென்னைக்கு வந்து செல்கின்றனர்.

மக்கள் தொகைக்கு ஏற்ப உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினால் தான் மக்கள் வாழ முடியும். இதற்கான திட்டங்களை சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. சென்னையின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் பாலங்கள், சாலைகள், பார்க்கிங் திட்டங்கள், பூங்காங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள், நீர்நிலைகள் பராமரிப்பு என பல்வேறு திட்டங்கள் செயல்படுத் தப் பட்டுள்ளது.

சென்னையின் ஓராண்டு பட்ஜெட் என்பது சுமார் 10 ஆயிரம் கோடியாகும். இந்த நிதி யாண்டில் சுமார் ரூ.9,319 கோடி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதில் வருவாய் செலவி னம் மட்டுமே ரூ.6,146 கோடியாகும். வருவாய் பற் றாக்குறை என்பது ரூ.1,602 கோடியாக இருக்கிறது. இந்த சூழலில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தவெக அரசு பொறுப் பேற்றுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு புதிய திட்டங்களை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், தற்போது கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கான டெண்டர்களை ரத்து செய்து வருவது பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம், சென்னை மாநகராட்சி சார்பில் அடையாறு, பெசன்ட்நகர், பெரியமேடு, கீழ்ப்பாக்கம், மயிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் நடைபாதைகள் அமைப்ப தற்காக விடப்பட்ட ரூ.284 கோடி மதிப்பிலான 35 டெண்டர்களை சென்னை மாநகராட்சி ரத்து செய்தி ருந்தது. மேலும், சிறிய அளவிலான 150 டெண்டர்களையும் அதிகாரிகள் ரத்து செய்தனர். இதேபோன்று, கவுன் சிலர் களுக்கான வார்டு பராமரிப்பு நிதி ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாகவும் தமிழக அரசு குறைத்துவிட்டதாக கூறப்படுகிறது.

அத்துடன் சென்னை மாநகராட்சிக்கான தற்போதைய செலவுகளை மேலும் குறைக்கவும், புதிய உள்கட்டமைப்பு திட்டங்களை வகுக்கவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வேளச்சேரி புதிய மேம்பால திட்டம் உள்ளிட்ட ரூ.700 கோடி வரையிலான டெண்டர்களை தமிழக அரசு ரத்து செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. குறிப்பாக, திமுக ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட சில டெண்டர்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டு வருவ பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழக அர சின் இந்த செயல்களால், சென்னை மாநகராட்சிக்கு கிடைக்க வேண்டிய திட்டங்கள் அனைத்தும் கிடப்பில் போடப்படும் நிலை உருவாகியுள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில்,” சென்னை மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதிச்சுமை காரணமாக ரத்து செய்யப்பட்ட டெண்டர்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதிக மூலதனம் தேவைப்படும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மட்டுமே. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சியின் நிதி நிலைமை சீரடைந்த பிறகு, இந்தத் திட்டங்கள் அனைத்தும் மறு பரிசீலனை செய்யப்பட்டு மீண்டும் புதிய டெண்டர்கள் கோரப்படும். அதே நேரத்தில், - பொதுமக்களுக்குப் பயன்படுவதோடு மாநகராட்சிக்கு வரு வாய் ஈட்டித் தரும் திட்டங்களான மல் டிலெவல் வாகன நிறுத்துமி டங்கள் போன்ற பணிகள் எந்தவித் தடையுமின்றி வழக்கம் போல் தொடர்ந்து நடைபெறும்” என்று தெரிவித்துள்ளனர்.

# பள்ளிபாளையத்தில் அரசுப் பெண்கள் பள்ளி அருகே சட்டவிரோத மது விற்பனை!

நாமக்கல், ஜுலை 9-

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் அரசு பெண்கள் பள்ளிக்கு அருகே 24 மணி நேரமும் சட்டவிரோத மது விற்பனை நடைபெற்று வருவதாக பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பள்ளிபாளையம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 600 மீட்டர் தொலைவிலும், ஆவரங்காடு கிருஷ்ணவேணி மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு மிக அருகிலும் உள்ள குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து, குடிசைத் தொழில் போல சட்டவிரோத மது விற்பனை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

நள்ளிரவு 2 மணி முதல் காலை 11 மணி வரை நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும், உள்ளூர் பகுதியைச் சேர்ந்த பலரும் இதில் தொடர்புடையதாகவும் கூறப்படுகிறது.

சாதாரண உழைக்கும் மக்களை குறிவைத்து, ரூ.140 மதிப்புள்ள ஒரு குவாட்டர் மதுபாட்டில் ரூ.300 முதல் ரூ.400 வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் whatsapp எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் அளிப்பவர்களுக்கு நேரடியாக சென்று கொடுத்து வருவதாகவும் புகார் எழுந்துள்ளது

அரசுப் பள்ளி, அரசு மருத்துவமனை உள்ளிட்ட முக்கிய இடங்கள் அமைந்துள்ள பகுதியில் இவ்வாறு சட்டவிரோத மது விற்பனை நடைபெறுவதால் மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த சட்டவிரோத மது விற்பனையை முற்றிலும் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

### திருக்கழுக்குன்றத்தில்

# தொடர் மின்வெட்டு - மின்வாரிய அலுவலகத்தை மக்கள் முற்றுகை!


திருக்கழுக்குன்றம், ஜுலை 9-

திருக்கழுக்குன்றத்தில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டதால், பொதுமக்கள் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

திருக்கழுக்குன்றம் ஆயர்பாடி பகுதியில் உள்ள மின்மாற்றி பழுதடைந்தது. ஜுன் மாதம் 24ம் தேதி, அதை அகற்றிய மின்வாரியம், மீண்டும் பொருத்த வில்லை. வேறு பகுதியில் உள்ள மின்மாற்றி யில் இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டது.

இதனால் இரண்டு வாரமாக, அடிக்கடி மின்னழுத்த குறைவு, மின்வெட்டு என ஏற்பட்டு, பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நேற்று காலையில் இருந்தே மின்வெட்டு ஏற்பட்டு, இரவும் நீடித்தது. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள், திருக்கழுக்குன்றம் மின்வாரிய அலுவலகத்தை, நேற்று இரவு 7:45 மணிக்கு முற்றுகையிட்டனர். மின்வாரிய போர்மேன் உள்ளிட்ட ஊழியர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து கலைந்து சென்றனர்.



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., தொகுதிக்கு உட்பட்ட பெரிய தும்மக்குண்டு, சின்ன தும்மக்குண்டு, ஆண்டிபட்டி நமச்சிவாயபுரம், வேலாயுதபுரம், ராமச்சந்திராபுரம், உடையநாதபுரம், கொப்புசித்தம்பட்டி மற்றும் பந்தல்குடி ஆகிய பகுதிகளில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பந்தல்குடி சாகுல்ஹமீது, ஒன்றியச் செயலாளர்கள் பால கணேசன், பொன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கொப்பையராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் தா.மோ. வெங்கடேஷ், துணை அமைப்பாளர் சுரேஷ் குமார், தொண்டரணி கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகுஇராமனுஜம், தங்கமணி, பொறியாளர் அணி முகதீன், காந்திநகர் சீனிவாச பெருமாள், மலைப்பட்டி வெங்கட்ராமன், ஜே.சி.பி. சிவா, முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் பாலாஜி பத்ரிநாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.